[1979 பிப்ரவரி 26]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, மூல வினாவாக இருந்தால் அச்சடித்து வைத்து விடலாம். நான் நீண்ட நேரம் பதில் சொன்னது துணைக் கேள்விக்குத் தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு அமைச்சரவர்கள் தெளிவாக விளக்கம் தருவதுகுறித்து நான் மறுத்துக் கூறவில்லை. ஒரு மணி நேரத்திற்குள் காரியங்கள் முடிய வேண்டுமென்றால் இந்த நிலையை மேற்கொண்டால் முடியாது என்பதற்காகத்தான் சொல்ல விரும்புகிறேன்.

முதியோர்களுக்கு உதவிப்பணம்

*வினா எண். 178—திரு. என். கிட்டப்பா :

திரு. பொ. அழகர்சாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அறுபது வயதுக்கு மேற்பட்ட எல்லா முதியோர்களுக்கும் உதவிப்பணம் வழங்கும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு எந்தெந்த வகையானவர்களுக்கு, எந்தெந்த அடிப்படையில் உதவிப்பணம் வழங்கப்படுகிறது? தற்பொழுது வழங்கப்படும் உதவித்தொகை மாதம் ஒன்றுக்கு எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா? அறுபது வயதுக்கு மேற்பட்ட எல்லோருக்கும் தர இயலவில்லை என்றாலும்கூட, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்த உதவித் தொகையை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, வாழ வழியற்று, மரபுப்படியோ வழக்கப்படியோ காப்பாற்றுவதற்குக் கடமைப்பட்ட உறவினரற்று அனாதையான நிலையில் உள்ள முதியவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு நடவடிக்கையாக அவர்களுக்கு உதவி அளிப்பதற்காக ''மூப்பு கால உதவித் தொகை'' வழங்கப்படுகிறது. புகலற்ற நிலையில் குருடு, தொழு நோய், மன நோய்,

[1979 பிப்ரவரி 26

பக்கவாதம் அல்லது உறுப்பு இழப்பு இவை எதனாலாவது உழைத்துப் பிழைக்க முடியாத ஏலாமை நிலையில் 60 வயதும் அதற்கு மேற்பட்டும் உள்ளவர்களுக்கும், புகலற்ற நிலையில் 65 வயதும் அதற்கு மேற்பட்டும் உள்ளவர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மாதம் ஒன்றுக்கு இருபது ரூபாய் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது இந்த முதியோர்களுக்கு வழங்கக்கூடிய உதவித்தொகையானது 1962 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்ட காலத்தில் எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டதோ அதே எண்ணிக்கையில்தான் வழங்கப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, இப்பொழுது, முதியோர் உதவித்தொகை பெறுவதற்குத் தகுதியுள்ள, எந்தவிதமான வருமானமோ எந்தவிதமான சொத்து சுகமோ இல்லாதவர்கள் அத்தனைபேர்களுக்கும் இந்த உதவித் தொகை வழங்கப்படுமா? இப்பொழுது கொடுக்கப்படுவதற்கு சுமார் ஒரு கோடி ரூபாய் ஆகும் என்று கருதுகிறேன். நான் சொன்னவாறு செய்வது என்றால் மேற்கொண்டு ஒரு கோடி ரூபாய்தான் வரும் என்று நினைக்கிறேன். எனவே, விவசாயக் கூலிகளாக இருந்து, இப்பொழுது உழைக்கச் சக்தியற்ற நிலையில் மனுச் செய்து கொண்டுள்ள அத்தனை பேர்களுக்கும் முதியோர் உதவித் தொகையை இனியாவது வழங்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது 60,972 பேர்களுக்கு வழங்கப்படுகிறது,

திரு, ரா, உமாநாத்: பேரவைத் தலைவரவர்களே, இந்த மனுக்களைப் பரிசீலனை செய்து முடிவெடுப்பதில் ஏற்படக்கூடிய தாமதம் ஸ்கேன்ட்டலெஸ் அன்ட் சீரியஸ் ஆக இருக்கிறது, ஆறு மாதங்களாகியும் கூட டெசிஷன் எடுப்பதில்லை. அதற்குள் போட்டவர்களே செத்து விடுகிறார்கள். எனக்குத் தெரிந்தே மூன்று கேஸ்களில் செத்துவிட்டார்கள். கொடுப்பதும் ரெகுலராகக் கொடுப்பதில்லை. இடையிலே நிறுத்தி விடுகிறார்கள். இது முதியோர் உதவிப் பணமா அல்லது மூச்சடைக்கும் உதவிப் பணமா என்ற நிலையில் இருக்கிறது. இந்த டிலேயை கட் ஷார்ட் செய்வதற்கு என்ன ஏற்பாடு?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, புகலற்றோர் இயல்பாக வசிக்கின்ற வட்டத்தின் தாசில்தாருக்கு தங்கள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் குறித்து விசாரணை நடத்தி சரிபார்த்த பின்னர், அந்த விண்ணப்பங்கள் மீது ஆணை

1979 பிப்ரவரி 26]

வேண்டி தாசில்தார் தனது அறிக்கையை வருவாய்க் கோட்ட அதிகாரிக்கு அனுப்புவார், உதவித் தொகையை வழங்குவதற்கு வருவாய்க் கோட்ட அதிகாரியே பொருத்தமான அதிகாரி யாவார். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தத்தம் மாவட்டங்களில் இத்திட்டத்திற்கு மேற்பொறுப்பு வகிக்கிறார்கள். விண்ணப்ப நாளைப் பொறுத்து மூப்பு கால உதவித் தொகை தற்போது வழங்கப்படுகிறது. இதனால் அதிக வயதில் ஆதரவற்றவர்களாகி உதவித் தொகை கேட்டு விண்ணப்பிக்கும் சிலர் உரிய நேரத்தில் உதவித்தொகை பெற முடியவில்லை. எனவே, மூப்பு கால உதவித் தொகையை அனுமதிக்கும்போது 70 வயதும் அதற்கு மேம்பட்டும் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் அனைத்தும் (விண்ணப்ப நாள் எவ்வாறாயிருப்பினும்) முதலில் முடிவு செய்யப்பட வேண்டும் என்றும், 65 முதல் 69 வயதுள்ளவர்களின் விண்ணப்பங்கள் அவை வரப்பெற்ற நாட்களையொட்டி முடிவு செய்யப்பட வேண்டும் என்றும் அரசு கட்டளை இட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 179. திரு. என், வரதராசன் ....

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள். என்னென்ன தகவல்கள் ஓரளவுக்கு கிடைக்க வேண்டுமோ அது கிடைத்தாகிவிட்டது. நேரத்தைப் பற்றி நான் முதலிலேயே சொல்லி விட்டேன். ஆகவே, அமருங்கள் வினா எண். 179. திரு. என். வரதராசன்—மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

மின்வாரியத்தில் பயிற்சிப் பணியாளர்கள்

*வினா எண். 179—திரு. என். வரதராஜன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்வாரியத்தில் தமிழகம் முழுவதும் எடுத்துக் கொள்ளப்பட்ட அப்ரண்டிஸ்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் பயிற்சிக் காலம் முடிந்த பின் வீட்டுக்கு அனுப்பப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் அளிக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஈ) ஆம் எனில், அதன் விபரம் யாது?